செ.வெ.எண்: 238/2019 நாள்: 03.06.2019

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 605 மனுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக்கொண்டார்...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (03.06.2019) பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் பொதுமக்களிடமிருந்தும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பெற்றுக் கொண்டார்.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கல்வி உதவித்தொகை, வங்கிக்கடனுதவி, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி 605 மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட்டார். மேலும், நிலுவையிலுள்ள மனுக்களின் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 1 மாற்றுத்திறனாளி நபருக்கு ரூ.6400/- மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளும், 2 மாற்றுத்திறனாளி நபருக்கு ரூ.9820/- மதிப்பிலான மடக்கு சக்கர நாற்காலியும், 1 மாற்றுத்திறனாளி நபருக்கு ரூ.3460/- மதிப்பிலான நவீன ஒளிரும் மடக்கு ஊன்றுகோலும் மற்றும் 1 மாற்றுத்திறனாளி நபருக்கு ரூ.3800/- மதிப்பிலான வாட்டர் பெட்டும், ஆகமொத்தம் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.23480/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூரை சேர்ந்த ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த மாணவன் வி.அஜய்குமார், த/பெ.வி.விஜயகுமார் என்பவருக்கு 2017-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பத்தாம் வகுப்பில் ஸ்ரீராமஜெயம் குளோபல் சீனியர் செகன்டரி பள்ளி, போளூர் சி.பி.எஸ்.சி பாட திட்டத்தில் பயின்று முழு மதிப்பெண் எடுத்தமைக்காக சிறந்த மாணவனாக தேர்வு செய்யப்பட்டு டாக்டர் அம்பேத்கார் தேசிய மெரிட் விருதிற்கான மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் சான்றிதழ் மற்றும் ஊக்க உதவித்தொகையாக ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) தொகையினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

மேலும், மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் ஜமுனாமரத்தூர் வட்டம், சந்தவாசல் வழி, எலந்தம்பட்டு கிராமத்தை சேர்ந்த பெரியபையன் மகன் சின்னபாப்பா என்பவருக்கு சிறு தொழில் தொடங்குவதற்காக ரூ.15,000/- மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தன்விருப்ப நிதியிலிருந்து காசோலையாக வழங்கினார்.

மேலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலமாக தண்டராம்பட்டு வட்டம், கீழ்வலசை கிராமத்தை சேர்ந்த பொன்னுசாமி என்பவரின் மகன் சுந்தரம் என்பவருக்கும், சின்னபையன் என்பவரின் மகன் தங்கவேல் என்பவருக்கும், சாமிக்கண்னு என்பவரின் மனைவி ஷோபனா என்பவருக்கும், குமார் என்பவரின் மனைவி ஜோதி என்பவருக்கும், குழந்தை என்பவரின் மகன் ராஜி என்பவருக்கும் மற்றும் கண்ணன் என்பவரின் மனைவி கண்ணம்மாள் என்பவர்களுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணையிணையும், ஆரணி வட்டம், துரை(லேட்) என்பவரின் மனைவி நதியா என்பவருக்கு விதவை உதவி தொகைக்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலமாக ரூ.6300/- வீதம் 5 பயனாளிகளுக்கு ரூ.45,000/- மதிப்பிலான தையல் இயந்திரத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தன் விருப்ப நிதியிலிருந்து வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பொ.இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.பா.ஜெயசுதா, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் திரு.இரா.வில்சன் இராஜசேகர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.க.வ.பரிமளா, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி.லாவண்யா, மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.சந்திரா மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சு.சரவணன், மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**